அ.வ.எண்: 46/2025 நாள்: 12.03.2026

வா.சா.–1

மங்கையர்க்கரசி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1.நான் தாவா வழக்கில் தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் 1986 ஆம் ஆண்டு ராமநாதன் செட்டியார் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினேன். மேற்படி 1986 ஆம் ஆண்டு ஆவணத்தில் தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால் இரண்டு இலக்க சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. தாவா சொத்து வருவாய் கணக்குகளில் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது எனக்கு மட்டுமே உரிய பாதை ஆகும். தாவா சொத்தை வேறு யாரும் பாதையாக பயன்படுத்தி வருகிறார்களா என்றால் இல்லை, நான் மட்டும்தான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் பாதைக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டது ஆற்றை வித்து பிரதிவாதிகளிடம் மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

2. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா

என்றால் படித்துப் பார்த்தேன். தாவா சொத்து பாதையாக தவறாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று விபரம் எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக சொத்தை அளந்தார்கள் அப்பொழுதுதான் தெரியவந்தது. வருவாய் நீதிமன்றம் என்று ஒரு நீதிமன்றம் உள்ளது பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா சம்பந்தமாக வருவாய் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றும் சொன்னால் நாங்கள் தாலுகா ஆபீசில் பல மனுக்கள் கொடுத்தோம் ஆனால் அதில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றும், பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.12 16:23:07 +0530